**தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், சிவகங்கை.**

# MCOP.No. 109/2023

# PW.1.

*****

2025 ஆண்டு ஏப்ரல் திங்கள் 09-ம் நாள் மனுதாரர்/எதிர்மனுதாரர் என்பவரின் சாட்சியான வாக்குமூலம் 1956 ஆண்டு 10 வது விதியின்படி திரு. குணசேகரன், Grade II Bench Clerk (தலைமை எழுத்தர்) என்பவரால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | **சக்தி** | **தந்தை பெயர்** | : | **சந்திரசேகரன்** |
| **கிராமம்** | : | **வடக்குஅண்டக்குடி** | **தாலுகா** | : | **இளையான்குடி** |
| **தொழில்** | : | **டிரைவர்** | **வயது** | : | **34/2025** |

---

**முதல் விசாரணை**

**<u>09.04.2025</u>**

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட எனது ஆதார் அட்டை நகல் **ம.சா.ஆ.1** ஆகும். விபத்து சம்மந்தமாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.2** ஆகும். மோட்டர் வாகன ஆய்வாளர் அறிக்கை ஆன்லைன் நகல்கள் எண்ணம் - 2 **ம.சா.ஆ. 3** ஆகும். குற்ற இறுதி அறிக்கை நகல் **ம.சா.ஆ. 4** ஆகும். STC 112/2023 உத்தரவு நகல் **ம.சா.ஆ. 5** ஆகும். அசல் 1ம் எதிர்மனுதாரர் வசம் இருப்பதாக கூறி ஓட்டுநர் உரிமம் நகல் **ம.சா.ஆ. 6** ஆகும். அசல் 1ம் எதிர்மனுதாரர் வசம் இருப்பதாக கூறி ஆர்சி நகல் **ம.சா.ஆ. 7** ஆகும். அசல் 1ம் எதிர்மனுதாரர் வசம் இருப்பதாக கூறி பாலிசி நகல் **ம.சா.ஆ. 8** ஆகும். மருத்துவச்சான்றிதழ் நகல் **ம.சா.ஆ. 9** ஆகும். விடுவிப்பு அறிக்கை அசல் **ம.சா.ஆ. 10** ஆகும். விடுவிப்பு அறிக்கை நகல் **ம.சா.ஆ. 11** ஆகும். மருத்துவ பில்கள் **ம.சா.ஆ. 12** ஆகும். மருத்துவ பில்கள் **ம.சா.ஆ. 13** ஆகும். மருத்துவ பில்கள்

**ம.சா.ஆ.14** ஆகும். மருத்துவ பில்கள் **ம.சா.ஆ. 15** ஆகும். கொட்டேசன் நகல் **ம.சா.ஆ. 16** ஆகும். அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட எனது லைசென்ஸ் நகல் **ம.சா.ஆ.17** ஆகும். அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட எனது சிங்கப்பூர் லைசென்ஸ் நகல் **ம.சா.ஆ.18** ஆகும். எனது சம்பள சான்றிதழ் **ம.சா.ஆ.19** ஆகும். அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட எனது பாஸ்போர்ட் நகல் **ம.சா.ஆ. 20** ஆகும். அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட எனது வங்கி கணக்கு புத்தக நகல் **ம.சா.ஆ.21** ஆகும். மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:**

விபத்து சமயத்தில் நான் இருசக்கரவாகனத்தை ஓட்டி சென்றேன். அந்த இருசக்கரவாகனம் எனக்கு சொந்தமான வாகனம் ஆகும். நான் இருசக்கரவாகனத்தை ஓட்டி செல்லும்போது தலைக்கவசம் அணிந்திருந்தேன். விபத்தில் எனக்கு தலையில் காயம் ஏற்படவில்லை. எனக்கு பின்னால் வந்த டாடா ஏசி வாகனம் என் மீது மோதியது. பின்னால் வந்த டாடா ஏசி வாகனத்தை கவனிக்காமல் நான் தான் வாகனத்தை ரோட்டின் குறுக்கே ஒட்டி சென்றால் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு என்னுடைய கவனக்குறைவும் காரணம் என்பதால் நஷ்ட ஈட்டில் பாதி நான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றால் சரியல்ல. விபத்து நடந்த உடன் நான் இளையான்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். மேல்சிகிச்சைகாக சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். சிவகங்கை அரசு மருத்துவமனையிலிருந்து மேல் சிகிச்சைக்காக என்னை மதுரை அரசு மருத்துவனைக்கு போக சொன்னார்கள் நான் மீனாட்சி மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை செய்தேன். நான் மீனாட்சி மருத்துவமனையில் மூன்று நாட்கள் உள்நோயாளியாக இருந்து சிகிச்சை பெற்றேன். விபத்தில் எனக்கு இடது கை மணிக்கட்டில் எலும்பு முறிவு, இடது காரை எலும்பு முறிவு, இடது தொடைக்கு கீழே உள்ள காலில் எலும்பு முறிவு சிகிச்சைக்கு பின்பு காலை அகற்றி விட்டார்கள். மீனாட்சி மருத்துவமனையில் எனக்கு ஏற்பட்ட தொடை எலும்பு முறிவுக்கு அறுவை சிகிச்சை செய்தார்கள். மற்ற காயங்களுக்கு மாவு கட்டு போட்டிருந்தார்கள். மூன்று நாட்களுக்குபின்பு மீனாட்சி மிசின் மருத்துவமனையில் சிகிச்சைக்காக இருக்க

சொன்னார்கள் ஆனால் நான் சிகிச்சை செய்யவில்லை. நான் மருத்துவரின் ஆலோசனைக்கு விரோதமாக மீனாட்சி மிசின் மருத்துவமனையிலிருந்து வெளியேறி விட்டேன். நான் பணம் செலவழிக்க வசதி இல்லாததால் மருத்துவமனையிலிருந்து வெளியேறிவிட்டேன். பின்னர் நான் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் அன்றைய தினமே சிகிச்சைக்கு சேர்ந்தேன். நான் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் உள்நோயாளியாக சுமார் 1 ஒன்றரை மாதங்கள் சிசிச்சையில் இருந்தேன். எனக்கு மேற்படி மருத்துவமனையில் இடது கால் தொடையில் ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை செய்தார்கள். நான் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் எனக்கு செயற்கை கால் பொருத்துவதற்கு அறிவுரை செய்தார்கள் ஆனால் நான் பொருத்தவில்லை. செயற்கை கால் பொருத்திவிட்டால் என்னால் ஓரளவிற்கு நடக்க முடியும் என்றால் பொருத்தி பார்த்தால் தான் தெரியும். செயற்கை கால் பொருத்தும் வசதி அரசு மருத்துவமனையிலேயே இருப்பது பற்றி எனக்கு தெரியாது. நான் மீனாட்சி மிசின் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான பைனல் பில்கள் வாங்கவில்லை. நான் மருத்துவரின் ஆலோசனைக்கு விரோமாக மருத்துவமனையிலிருந்து விடுவிப்பு செய்ததால் எனக்கு மேற்படி மருத்துவமனையில் பைனல் பில் வழங்கவில்லை. நான்அரசு மருத்துவமனையில் எனக்கு ஏற்பட்ட மற்ற காயங்கள் எல்லாம் சரியாகிவிட்டது ஆனால் தொடையில் ஏற்பட்ட காயங்கள் மட்டும் சரியாகவில்லை. மேற்படி அரசு மருத்துவமனையில் இன்று வரை வெளிநோயாளியாக சிகிச்சை பெற்று வருகிறேன். நான் விபத்தில் அதிக நஷ்ட ஈடு பெறுவதற்காக மருத்துவ பில்களை மிகைப்படுத்தி தாக்கல் செய்துள்ளளேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு நான் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல. எனக்கு செயற்கை கால் பொருத்திவிட்டால் ஊனம் எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

A PASUMPON SHANMUGAIAH

Digitally signed by A PASUMPON SHANMUGAIAH
Date: 2025.04.09 13:51:25 +0000